DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.345/2025**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தேஜ்ராம்சிங் | | : |
| த/பெ | : கஜேந்திரசிங் | மதம் | : |
| கிராமம் | : தாம்பரம் | தொழில் | : தனியார் நிறுவனம் |
| வட்டம் | : சென்னை | வயது | : 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 18.06.2026**

**குறுக்கு விசாரணை: PW1**

1. எனது முப்பாட்டன் ராஜஸ்தானை சார்ந்தவர்கள், எனது அப்பாவிற்கு அப்பா தாம்பரத்தை சார்ந்தவர். என் அப்பா வட்டிக்கு விடும் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல, இரயில்வேயில் வேலை பார்த்தார். நான் வட்டிக்கு பணம் தரும் தொழில் செய்து வருகிறேனா என்றால் சரியல்ல. MNC நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். நானும் எதிரியும் ஒரே நிறுவனத்தில் வேலை பார்த்தோமா என்றால் நான் நிரந்தர பணியாளர் ஆவேன், எதிரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலை பார்த்தார். எதிரி 2017 ஜீன் மாதத்தில் ஒப்பந்ததாரராக நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார் அதன் மூலம் பழக்கம். நானும் எதிரியும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். நானும் எதிரியும் சேர்ந்து ஒரு நிறுவனம் தொடங்க பேசிக்கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன், எந்த தேதியில் பணம் கேட்டார் என்ற விவரத்தை புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையாகவே எதிரி பணம் கேட்டிருந்தால் அந்த தேதியை புகார் மனுவில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல, எதிரி பணம் வாங்கினார். எப்படி பணம் கொடுத்தேன்

வங்கி மூலம் செலுத்தினேனா அல்லது ரொக்க பணமாக கொடுத்தேனா என்ற விவரத்தை புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான், ரொக்க பணமாக கொடுத்தேன்.

2. யார் முன்னிலையில் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்ற விவரம் புகார் மனுவில் இல்லை என்றால் சரிதான். எதிரி பலமுறை பணம் கேட்டதாக புகார் மனுவில் தெரிவித்திருந்தேன், எந்த தேதியில் பணம் தர ஒப்புக்கொண்டேன் என்ற விவரம் புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்ததற்கு பாதுகாப்பிற்காக காசோலை வாங்கி வைத்தேன் என்றால் சரியல்ல, நம்பிக்கையில் பேரில் கொடுத்தேன் பணத்தை 6 மாதத்தில் திருப்பி தருவதாக கூறினார். 2017 ஆம் ஆண்டில் எனது மாத வருமானம் தோராயமாக ரூ.50,000/– இருக்கும். 2017 ஆம் ஆண்டிற்கான சம்பள ரசீது தாக்கல் செய்ய முடியுமா என்றால் நிறுவனத்தில் கேட்டு தெரிவிக்கிறேன். தற்பொழுது எனது மாத வருமானம் ரூ.65,000/–. நான் கடன் தரும் போது எதிரி பின்தேதியிட்ட காசோலை கொடுத்தார் என்றால் சரியல்ல, கடனை திருப்பி கேட்கும் போது பின்தேதியிட்ட காசோலை கொடுத்தார். எதிரி பூர்த்தி செய்த காசோலை தான் கொடுத்தார். வழக்கு காசோலையில் கையெழுத்து நீலநிற மையிலும் மற்ற விவரங்கள் கருப்பு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், எதிரி தான் கொடுத்தார். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. 2023 ல் வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்து எதிரிக்கு கொடுத்தேனா என்றால் இல்லை, கைப்பணத்தில் இருந்து கொடுத்தேன். ரூ.1,00,000/– த்திற்கு மேல் பரிவர்த்தனை வங்கி மூலம் தான் தரவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் வீட்டில் நான் மட்டும தான் வேலை செய்கிறேன் என்றால் சரியல்ல, என் மனைவி வேலை பார்க்கிறார், என் அப்பா இரயில்வேயில் வேலை பார்த்து

ஓய்வு பெற்றுள்ளார். எவ்வாறு பணம் வந்தது என்று புகார்மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 2023 ஆம் ஆண்டு எதிரி சென்னையில் வசிக்கவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் எதிரி சென்னையில் தான் வசித்தார், பெங்களூரில் ஒப்பந்தம் மூலம் வேலை எடுத்து செய்து வருகிறார். பதில் அறிவிப்பில் என்ன விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் வாங்கிய பணத்தை தவறாக கூறினார் மேலும் எங்களிடையே இதற்கு முன்பாக பல பரிவர்த்தனைகள் நடந்தது அதை திருப்பி கொடுத்துவிட்டார். பதில் அறிவிப்பில் உள்ள சங்கதியை மறுத்து நான் Rejoinder அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

எதிர் தரப்பு வழக்கறிஞர் கோரியதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K